படையில் அமைக்கப்பட்ட கமக்காரர் தொகுதிகளினால் இயக்கப்பட்ட அருகேயுள்ள நிலப்பரப்புகளுக்கு கிடைக்கற்பாலதாக்கலாம்: இவை வங்கிகளினால் நுணுக்கமாக மேற்பார்வையிடப்பட்ட கடன்கள் வங்கி அலுவலர்களுக்கு மேலதிக வேலையை ஏற்படுத்துவதாக அமைந்தது. இதனை ஈடு செய்வதற்கு சலுகை ஊக்கவூதியங்கள் இருத்தல் வேண்டும். வங்கிகளும் அவற்றின் கிளைகளும் கிராமியத் துறைக்கு இவ்வகையில் கடன் அளிப்பதற்கு உதவுமுகமாக தமது மூலங்களில் ஒரு பகுதியை ஒதுக்குமாறு வேண்டப்படல் வேண்டும்; அத்துடன் அண்மைக்காலங்களில் விரும்பிய கிளை நீடிப்பு செயற்றிட்டங்கள் காரணமாக தமது சிறிய எண்ணிக்கையான பயிற்றப்பட்ட அலுவலரை பரம்பலாக வைத்து இருந்த வங்கிகள் தமது பயிற்சித் திட்டத்தை குறிப்பாக கிராமிய வேளாண்மைக்கு கடன் அளிப்பதை கடுமையாகக் கருத்தில் எடுத்தல் வேண்டும். பல்வேறு மாவட்டங்களில் தொடங்கப்பட்ட பன்னாட்டு அடிப்படையில் ஆதரவு பெற்ற ‘ஒன்று சேர்க்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தித் திட்டங்கள்’’ வங்கிகள் கூடிய நம்பிக்கையுடன் கிராமிய வங்கித் தொழிலில் ஈடுபடுவதற்குரிய சூழ்நிலையை அளிக்கும். இவ் அம்சங்களில் வங்கிகள் கருத்துள்ள நடவடிக்கையை தொடங்க முடியுமாயின், கொடுகடன் உத்தரவாதத்தை மிக சாதாரண மட்டத்தில் மீள அறிமுகப்படுத்தலாம். மத்திய வங்கி தனது முந்திய அபிவிருத்தி நிதி திணைக்களத்திற்கு புது அமைப்புக்கொடுத்து கிராமிய கொடுகடன் துறையில் புதிய செயல்களை மேற் கொள்ளும் நோக்குடன் புதிய கிராமியக் கொடுகடன் அபிவிருத்தி நிதித் திணைக்களமொன்றை அமைத்துள்ளது.

## கைத்தொழில்

கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி (பெருந்தோட்டத் துறையின் ஏற்றுமதி பதப்படுத்தல் கைத்தொழில்கள் தவிர்ந்த) 1978இன் ரூ. 88,520 இலட்சத்திலிருந்து 1979இல் ரூ. 107,810 இலட்சமாக அதிகரித்து 22 சதவீத விரிவாக்கத்தினை வெளிப்படுத்துமென மதிப்பிடப்பட்டது.[1] விலை மாற்றங்களுக்கான [2] சீராக்கங்கள் செய்ததன் பின்னர் கைத்தொழில் உண்மை வீதம் 1978இன் 11 சதவீதத்துடன் ஒப்பீடுகையில் தற்காலிகமாக 1979இல் ஏறக்குறைய 4 சதவீதமாக அமையும் என மதிப்பிடப்பட்டது.

1979இல் தயாரிப்புத்துறையின் முழுமையான செயலாக்கம் முன்னைய ஆண்டில் பெறப்பட்ட உயர்ந்த மட்டத்தினைவிட ஓரளவில் குறைந்தே காணப்பட்டது. ஆண்டு 1977ஐத் தொடர்ந்து பொருளாதாரத்தில் மேற்கொள்ளப்பட்ட தாராளமாக்கலின் காரணமாக ஒரு உறுதியான காலப்பகுதியாக நடைமுறை ஆண்டின் கருதலாம் இவ்வாண்டுக் காலப்பகுதியில் இறக்குமதிப் போட்டிகள் அதிகரித்திருந்த அதே வேளையில் சீராக்கல் தொடர்பான பிரச்சினைகளும் தொடர்ந்தும் இருந்து வந்துள்ளமையைத் தெளிவாகக் காணமுடிகின்றது. எனினும் முன்னைய ஆண்டினைப் போன்ற நன்கமைந்த உற்பத்தி இயல

1. கடந்த காலங்களில் போன்று உள்நாட்டு கைத்தொழிலில் பெரும்பங்கு வகிக்கும் 1,500 கைத்தொழில் நிறுவனங்கள் தொடர்பாக மத்திய வங்கி நடாத்திய அளவீட்டின் அடிப்படையில் இத்தரவு அமைந்துள்ளது. விபரங்கள் அடுத்து வெளிவரவுள்ள பொருளாதார மீளாய்வில் தரப்படவுள்ளன.

2. நம்பகமான கைத்தொழில் விலைச்சுட்டெண்கள் இன்மையால் தனியார்துறையின் உற்பத்தி பெறுமதியினைக் குறைப்பதற்கு மொத்த விலைச்சுட்டெண்கள் தொடர்பான, அவற்றின் கூறுகள் பயன்படுத்தப்பட்டதுடன் பொது துறையின் உற்பத்திப் பெறுமதியினைக் குறைப்பதற்கு தொகையளவுச் சுட்டெண்கள் பயன்படுத்தப்பட்டன.

ளவுப் பயன்பாட்டின் விளைவாக இறக்குமதித் தளர்விஞல் இலகுவாகக் கிடைக் கப்பெற்ற மூலப்பொருட்களும் துணைக் கருவிகளும் கைத்தொழிலுக்கிடையில் பெருமளவு பங்கீட்டிற்கு வழிவகுத்தன. பதினைந்து ஆண்டுகளுக்குமேல் பழமை வாய்ந்தவையும், முதன்மை இறக்குமதி பதிலீட்டுக் கைத்தொழில்கள் இறக்கு மதி செய்யப்பட்ட பொறிகளிற்கான விலை அதிகரித்திருக்கும் சூழ்நிலையில்தமது பொறிகளையும், கருவிகளையும் நவீனமயப்படுத்துவதில் பிரச்சினைகளை எதிர் நோக்கின.

மத்திய வங்கியின் கேள்விகொத்திற்குக் கொடுக்கப்பட்ட விபரங்களி லிருந்து கணிப்பின் கைத்தறி ஆடைகள், கையால் செய்யப்பட்ட தாள். சவர்க் காரம், வர்ணப்பூச்சு போன்ற இராசன உற்பத்திகள் வன்கலம், உலோக உற் பத்திகள் போன்றவையினை உற்பத்தி செய்த சிறு கைத்தொழில்கள் குடிசைக் கைத்தொழில்கள் என்பன கடுமையான இறக்குமதி போட்டியிஞல் பாதிப்புற் றன. தாராளமயமாக்கப்பட்டதன் இரண்டு ஆண்டுகளின் பின்னரும், உயர்ந்த பாதுகாப்புப் பெற்றிருந்தும் மாறுபடும் சூழ்நிலைக்கேற்ப தம்மை மாற்றிக் கொள்ள இயலாத தன்மை இத் துறையின் அதிக அளவு திறமையின்மையைக் காட்டுகின்றது. மறுபுறத்தில் செங்கற்கள், ஓடுகள், மரப்பொருள் உற்பத்தி செய்வனவும், ஊாதிகளின் மேற்சட்டம் செய்வனவும் திருத்துவனவும் கிராமிய கைப்பணிப் பொருள் போன்ற கைத்தொழில்கள் துரிதமாக வளர்ச்சியடைந் தன. போட்டியிடமுடியாத தொழில்கள் உற்பத்தியில் ஈடுபடாது இருக்க விடுத்தால், அதஞல் ஏற்படும் தொழிலின்மையின் மிகக் கூடுதலான விளைவுகளை யொட்டியும் பொதுவாக இத்துறையின் நிலைபற்றியும் பெருமளவுக்கு எடுத் துரைக்கப்பட்டு வந்தது. ஆயினும், அரசிலிருந்தோ அல்லது சிறு கைத்தொழில் உற்பத்திகளினை நுகர்வோரிடமிருந்தோ இவர்கள் இப்போட்டிச் சார்பற்றதும் செயற்றிறன் அற்றதுமான கைத்தொழில்களை உதவுதொகைப்படுத்தலால் ஏற் படும் செலவினை ஈடுசெய்வதற்கு சாதகமாய் உள்ளன என்பதற்கு சான்றுகள் எதுவுமிருக்கவில்லை. இதன் விளைவாக பல சிறு கைத்தொழிலாளர்கள், வர்த்த கம் கட்டிடவாக்கம் போன்ற துறைகளை நோக்கி முதலீடு செய்ய முற்பட்டனர்.

அட்டவணை 1.12

கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி 1977 — 79

பத்து இலட்சம் ரூபாய்களில்

| கைத்தொழில் தொகுதி | உற்பத்தியின் பெறுமதி | | |
|---|---|---|---|
| | 1977 | 1978 | 1979 |
| 1. உணவு, குடிபானமும் புகையிலையும் ... | 2,294 | 2,609 | 2,856 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகளும் தோல் உற்பத்திகளும் ... | 698 | 1,008 | 1,128 |
| 3. தளபாடங்களை உள்ளடக்கி மரமும் உற்பத்திகளும் ... | 127 | 124 | 166 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் ... | 270 | 376 | 445 |
| 5. இரசாயன, பெற்றேலிய, கரி, இறப்பரும் பிளாத்திக்கு உற்பத்திகளும் ... | 2,469 | 3,279 | 4,508 |
| 6. உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்தி பெற்றேலியமும் கரியும் தவிர்ந்த ... | 411 | 592 | 710 |
| 7. அடிப்படை உலோக உற்பத்தி ... | 132 | 219 | 349 |
| 8. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறியும் போக்குவரத்துக் கருவிகளும் ... | 571 | 590 | 569 |
| 9. உற்பத்திகள் (வேறு எங்கும் குறிப்பிடாதவை) ... | 34 | 55 | 50 |
| மொத்தம் | 7,006 | 8,852 | 10,781 |

*தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

UNIVERSITY OF MORATUWA, SRI LANKA LIBRARY

நடைமுறைப் பெறுமதி வீதங்களில் இரசாயனம் உணவும் குடிவகைகளும் அடிப்படை உலோகஉற்பத்திகள் புடவையும் ஆடைகளும் உலோகமல்லா கனிப் பொருள் உற்பத்தித் துறைகள் என்பன1979இன் பெரும் விரிவாக்கத்துறைகளா கக் காணப்பட்டன. ஆயினும் விலை மாற்றங்களை கழிக்குமிடத்து உணவும் குடி வகைகளும் அடிப்படை உலோகப் பொருட்கள் உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் தாள் புடவையும் ஆடைகளும் என்பனவே முதன்மையான வளர்ச் சியைக்கொண்டிருந்தன. உணவு குடிவகைகள், புகையிலை ஆகிய துறையில் பெரு மளவு வளர்ச்சி காணப்பட்டது. புடவையும் ஆடைகளையும் பொறுத்த மட்டில் தனியார் தொழிற்சாலைகளின் வெளியீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு அரசதுறை புடவை ஆலைகளின் வெளியீட்டு வீழ்ச்சியை பெருமளவில் ஈடுசெய்தது. பொதுத் துறையில் தனியார் உருக்கு ஆலையின் உற்பத்திகளே அடிப்படை உலோக உற் பத்தித்துறையின் முழு வளர்ச்சிக்கும் வகைகூறி நின்றது. சீமெந்து, செங்கல், ஓடுகள் ஆகியவற்றின் வெளியீட்டில் (இவை அனைத்தும் கட்டடவாக்கக் கைத் தொழில் தொடர்புடையன) ஏற்பட்ட வளர்ச்சி உலோகமல்லாக் கனிப் பொருள் உற்பத்தித்துறை வளர்ச்சிக்கு வகைகூறியது. எவ்வாறாயினும் உண் மையான நியதிகளில் உணவும், குடிவகையும், இரசாயனம் பெற்றோலியம் உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகளும் தாளும் போன்ற முக்கிய துறைகளின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி முழுகைத்தொழில் வளர்ச்சியை 4 சதவீதத்தால் மீதப்படுத்தி உள்ளது. எண்ணெய் தூய்மைப்படுத்தல் வெளியீட்டில் ஏற்பட்ட 6 சதவீத வீழ்ச்சி இரசாயனத்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முழுக்காரணியாக விளங்கியது. சுங்கத் தரவுகளின்படி நடைமுறை விலைகளில் அமைந்த கைத் தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி 1979இல் ரூ. 37,310 இலட்சமாக இரட்டிப் படைந்தது. செலாவணி வீதத்தில் மாற்றங்களை செய்தபின்னர் இவ்வதிகரிப்பு ஏறக்குறைய 87 சதவீதமாகக் காணப்பட்டது. மூலப்பொருட்களின் பெரும் பங்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்த புடவைகள் பெற்றோலிய உற்பத்திகள் ஆகியவற்றின் ஏற்றுமதியில் பெருமளவு அதிகரிப்புகள் தென்பட்டன. கைத் தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதி அளவு 1978 இன் 22 சதவீதத்திலிருந்து 1979இல் 35 சதவீதமாக அதிகரித்தது.

எதிர்கால கைத்தொழில் அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள் இவ்வாண்டு காலத்தில் புதிய கைத்தொழில்களுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் தரவுகளைக் கொண்டு காணலாம். கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு ஏற்று மதி சார்ந்த கைத்தொழில்களிலிருந்து புதிய முதலீட்டு வாய்ப்புக்களை தொடர்ந்தும் வரவேற்று வருகின்றது. 1979 ஆம் ஆண்டு காலத்தில் பெ. கொ. பொ. ஆ. குழுவினால் ரூபா. 10410 இலட்ச முதலீட்டினையும், ஏறக்குறைய 13000 பேருக்கு வேலை வாய்ப்பினையும் வழங்கக்கூடிய 37 மொத்த திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 12 நிறுவனங்கள் ஆடைகள் கண்ணாடி உற்பத்திகள் மின் கருவிகள் கனிப்பொருள் உற்பத்திகள் ஆகிய கைத் தொழில்களில் உறுதியாக ஈடுபட முன் வந்துள்ளன. முன்னைய ஆண்டின் பெ. கொ பொ ஆ. குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட 52 கைத்தொழிகளில் 1979 இறுதி யில் 13 கைத்தொழில் கூறுகள் இயங்கிக் கொண்டிருந்தன. இக்கைத்தொழிலில் மொத்த மூலதனம் ரூ, 1960 இலட்சமாகும். இவற்றில் ஏறக்குறைய 40 சத வீதம் வெளிநாட்டுடன் இணைந்து செய்யப்பட்டதாகும். 1979 ஆம் ஆண்டு இந் நிறுவனங்களிருந்தான ஏற்றுமதிகள். ரூ. 1110 இலட்சமாகும். ஆயினும் அவை பெருமளவு இறக்குமதியில் தங்கியிருக்கின்றமையைப் பொறுத்தமட்டில் கூட் டப்பட்ட பெறுமதி மிகவும் குறைவாகும். இந்நிறுவனங்களின் பெரும்பான்மை

தைத்த ஆடைகளின் உற்பத்தியிலே ஈடுபட்டுள்ளன. அத்தகைய கைத்தொழில்கள் மேலும் விரிவாகின் ஏற்றுமதிப் பிரச்சினைகள் ஏற்படுமாகையால் கொ. பெ. பொ. ஆ. குழு 1979 இல் அத்தகைய கைத்தொழில் ஊக்குவித்தலை தவிர்த்துள்ளது.

கொ. பெ. பொ. ஆ. குழுவுக்கு புறம்பான வெளிநாட்டு முதலீடுகளை வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழு மேற்பார்வை செய்கிறது. அது முன்னைய ஆண்டில் செய்த 21 ஒப்புதல்களுக்கு எதிராக இவ்வாண்டு காலத்தில் 113 கைத்தொழில்களுக்கு ஒப்புதலளித்ததுடன் இவற்றில் ஏறக்குறைய 61 தயாரிப்புத் துறையைச் சார்ந்தவைகளாகும். கைத்தொழில் திட்டங்களின் மொத்த முதலீடு ரூ. 9,710 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1979 இல் ஒப்புதல்கள் அளிக்கப்பட்ட கைத்தொழில் திட்டங்களில் பெரும்பான்மை புடவை, ஆடைகள், கயிறு உற்பத்திகள் இறப்பரும் உலோக உற்பத்திகள் ஆகிய வகையினவாக திகழ்ந்தன. பல திட்டங்களில் ஏற்றுமதி வாய்ப்புக்கள் ஏறக்குறைய 100 சதவீதத்திற்கு உயர்ந்து காணப்பட்டன. ஆயினும் இவற்றில் நான்கிலொரு பங்கு திட்டங்களே வெளிநாட்டு கூட்டு உடன்படிக்கைகளின் அடிப்படையில் உறுதியான முதலீடுகளை மேற்கொள்வதில் முனைந்துள்ளன.

உள்நாட்டு முதலீட்டு ஒப்புதல் தொடர்பான அமைச்சுக்களுக்கு இடையில் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக கைத்தொழில் அறிவியல் அலுவல்கள், புடவைக் கைத்தொழில்கள், கடற்றொழில் கிராம கைத்தொழில் அபிவிருத்தி ஆகிய அமைச்சுக்களுக்கென தனியான உள்நாட்டு முதலீட்டு மதியுரைக் குழு (உ. மு. த. கு.) ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டின் 2,385 ஒப்புதல்களுடன் ஒப்பீடுகையில் 1979ஆம் ஆண்டில் 1,803 புதிய முதலீடுகள் இவற்றால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன. இவற்றின் நிதிப் பொறுப்புக்கள் ஏறக்குறை ரூ. 87,50 இலட்சமாக மதிப்பிடப்பட்டதுடன் ஏறக்குறைய 33,000 பேருக்கு மேலதிக தொழில் வாய்ப்பினை வழங்கும் ஆற்றலினையும் கொண்டிருந்தன. மேலும் ஒப்புதல்களின் பெரும்பான்மை புடவையும் ஆடையும் அவை சார்ந்த கைத்தொழில்களாகவும் விளங்கின.

**விலைகள்**

1979 இல் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின்[1] சராசரி 1978 இன் 2 சதவீத அதிகரிப்புக்கும் 1977, 1976ன் ஒரு சதவீத அதிகரிப்புக்கும் எதிராக 11 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. குறிப்பிட்ட இடங்களில் எண் அடிப்படையில் இக் குறிகாட்டியானது 1979 டிசெம்பரில் 1978 இன் அதே காலப்பகுதியின் 17 சதவீத அதிகரிப்புடன் ஒப்பீடுகையில் முந்திய ஆண்டின் அதே மாதத்திலும் பார்க்க 15 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

---

1. குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினரால் ஆக்கப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணும் மத்திய வங்கி மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணும் விலை மட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களை அளவிடுவதற்கு கிடைக்கற்பால வெளியிடப்படும் குறிக்காட்டிகளாகும். கொழும்பு நுகர்வோா விலைச் சுட்டெண் சில்லறை விலைகளின் போக்குகளை அளவிடுகையில் மொத்த விற்பனை விலை குறி காட்டி ஆரம்ப சந்தை மட்டத்தில் விலைகளை அளவிடுகிறது. முந்திய ஆண்டறிக்கையில எடுத்துக்காட்டப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைக்காட்டியின் குறைபாடுகள் இன்னமும் திருத்தப்படவில்லையாதலால் பொருளாதாரத்தின் சில்லறை விலைகளின் போக்குகளை திருப்திகரமாக விளக்கமுடியாதிருக்கின்றது.